[1969 பிப்ரவரி 26

இராமநாதபுரம் சாலையைவிட இராமநாதபுரம்-மண்டபம் சாலை யாத்திரிகர்களுக்கு மிகவும் இன்றியமையாதது; புயலினால் பெரிதும் பாழடைந்திருப்பது; வெள்ள அரிப்பாலும் சேதமுற்றிருப்பது. ஆகவே அதனுடைய இன்றியமையாத தன்மையைக் கருத்தில் கொண்டு அதை விரைவில் செப்பனிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினருடைய கருத்தை மனதில் கொண்டு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

குடகனாறு திட்டம்

85 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

குடகனாறு திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத் திட்டத்திற்கு செலவு அதிகம் ஆவதையும் புதிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ள போதிய அளவு மிகுதிநீர் இல்லாத காரணமும் காட்டி, இத்திட்டத்தை முந்திய அரசு ஒத்திப்போட்டுள்ளது, இருப்பினும் குடகனாறு ஆற்றுப் படுகையில் சிறுபாசனத் திட்டங்கள் ஆராயப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தை மறுபரிசிலனைச் செய்து மேற்கொள்ள இயலுமா, அதற்குள்ள சாத்தியக்கூறுகள் யாவை என அறிய இவ்வரசு மீண்டும் நீர்ப்பாசன தலைமைப் பொறியாளரைப் பணித்துள்ளது. அவரது ஆய்வுப் பரிவுரை கிடைத்த பின் இது குறித்து மீண்டும் அரசு கவனிக்கும். ஆற்றுக்கடைப் பகுதியில் சிறுமேம்பாடு திட்டங்கள் எடுத்துக்கொள்ள முடியுமா வென்பதும் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள வெள்ளியணைப் பகுதிக்கு நான் செல்லுகின்ற காலங்களில் அப்பகுதி மக்கள் என்னை அழைத்துச் சென்று அங்குள்ள கிணறுகளைக் காட்டுவார்கள். பல அடி ஆழம் தோண்டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் ஊறி இருக்காது. ஆனால் என்னைக் கூட்டிச் சென்ற மக்களின் கண்களில் கண்ணீர் ஊறி இருக்கும். இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலையுடைய அவர்களது குடிநீர்ப் பிரச்சினையும் வாழ்க்கைப் பிரச்சினையும் தீர, அரசு இத்திட்டத்தை முடிக்க விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் தொகுதிப் பிரச்சினையில் இவ்வளவு அக்கறை கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.